உ
சிவமயம்



சிவன்கோவிலடி, வட்டு வடக்கைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும்
நீர்கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி குலமணியம்மா அப்புத்துரை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

02.07.2005

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சிவன்கோவிலடி, வட்டு வடக்கைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும்
நீர்கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி குலமணியம்மா அப்புத்துரை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

02.07.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்



ஈன்று புறந்தருதல் என்றலைக்
கடன் என்பது புறநானூறு.
இவ்வாசகத்திற்கமைய
எமை இந்த வையகத்தில்
சிறப்புடன் வாழ வழிசமைத்த
எமது
அன்புத் தெய்வத்திற்கு
இம்மலர்
சமர்ப்பணம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

இப்படிக்கு,
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 02 |
| * | * |
| 06 | 06 |
| * | * |
| 1932 | 2005 |

அமரர்

## திருமதி. குலமணியம்மா அப்புத்துரை

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

பார்வைகா சித்திங்கள் பார்த்திப அபரபக்க
பேர்ஏகா தசிரேவ தியுலகே – வாரடிகாள்
குலமணி யம்மாவக் காளிங்கள் கழல்நாடி
நிலமது நீங்கிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளேகனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
'பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க' என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்

# திருமதி குலமணியம்மா அப்புத்துரை

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

## வாழ்வு மான்மியம்

உலக முவக்கு உயர்கா விலங்கை
நலந்தரு வடபால் நவில்தமி ழீழ
யாழெனு குடவில் யாங்கணும் பரவி
வாழ்நிலப் புலவில் வட்டு ரெனும்பதி
அரனது பணியும் அழகது கூட்ட
மழைக்கா லந்தனில் மனமது கிளர்ச்சியில்
அளைஇய கேணியும் ஆர்த்திடு இளைஞர்
விளையாட் டுக்களும் விதந்துரை புகல
திளைத்திடு மரங்களிற் திருமலி குடும்பம்
வல்லி புரமும் அன்னம் மாவும்
சொல்லிய வில்லறச் சுடரென வாங்கே
குலமணி யம்மா குதலையாய் மலர
இலநிக ரென்ன இருகர மேந்தி
பிடிபிசை கூழும் பெரிதாய் மாந்தி
அடிபிற கோடி அழாவி மகிழ்ந்து
ஐந்து வயதில் அரிவரி யேட்டை
முந்துற வளித்து முறைகல்வி யோம்பி
பன்னி ரண்டுப் பருவமீ தடைய
கன்னி யாகுங் காலம திதுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்திப மடைய அழகுறு மகளைப்
பார்த்துப் பெற்றோர் பரவச மடைந்து
மணவினை கண்டு மகிழ்வோ மென்ன
இணங்கிய குரவர் இவருடன் பெரியோர்
இலட்சு மணரும் வள்ளி யம்மையும்
நலமுடன் தந்த நன்கலக் குரிசில்
அரச காவல்(பொலிஸ்) இலாகா பணிபுரி
வரனிவ ரென்ன விதந்திடு காளை
அப்புத் துரையை அருமணம் பேசி
இப்புவ னத்தில் இயல்வே தப்படி
குலமணி யம்மா அப்புத் துரைதம்
நலமிகு விவாகம் நடந்தே யேறிட
இல்லற நெறிக்கீழ் இருந்த இவர்தம்
நல்லற நன்கல நன்மக்கட் பேறாய்
சாந்தகுல சிங்கம் கேதலோ கேஸ்வரி
தவரா ணியொடு தர்மகுல சிங்கம்
இவருடன் சந்திர ராணி யணங்கும்
இந்திரா ணியென இன்வா ரிசுகளாய்
அறுவர் அவனியில் அன்புடன் மலர
பெறுமுயர் கல்வி பெறுகென வுயர்ந்திட
சாந்தகுல சிங்கம் சிரேட்ட புதல்வன்
ஆந்தகு புஸ்ப லதாவினை வரிக்க
தவராணி யாங்கு தவரா சாவினை
அவனியில் விவாக மடைந்தே சுகிக்க
தர்மகுல சிங்கம் புனித ராணியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்வத வுலகிற் பார்மணம் புரிய
இந்தி ராணி இயல்குக தாசனை
சிந்தையில் வைத்துச் செழிப்பே காணக்
குலமணி யம்மா கொடியது தழைக்கென
நலமுறு பேரர் பேத்திய ராக
யசிந்தலா கவிதா ஜெயபிர வீனா
கசிவுறு நாக தீபன் மயூரன்
கிருசாந் தன்னொடு முத்தமிழ்ச் செல்வன்
அருதுஷ் யந்தினி மாலினி கோமதி
மாலதி தினோஜன் டினோசன் கோபிசன்
பாலரும் பேத்தி சுஜிதா வென்ன
மூவைந்து பேரை முன்னிலை கண்டு
பூவை யகமதிற் புகழுடன் பிறப்பாய்
நல்லிரா சாத்தி யம்மா வுடனாய்
செல்வ விநாயகம் சேர்ந்திடப் பெற்று
இன்புடன் வாழ்ந்த குலமணி யம்மா
அன்பு மைத்துனர் வேலுப் பிள்ளை
அவர்தம் மனையாள் பொன்னம் மாஇவர்
தன்னுற வின்பம் திருவுடன் பேணி
ஆயிரத்தித் தொளாயிரத் தெழுபத் தைந்து
பாயிர மாண்டு படர்முத லாக
அன்றி லிருந்து இன்று வரைக்காய்
நன்றமர் சிரேஷ்ட நவில்மரு கர்ராம்
தவராச நம்பிதம் துணையென விருந்து
புவனியிற் பிள்ளைகள் மருகர் மருகியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரர் பேத்தியர் பெருநிழல் சுகித்து
சீரழ காக வாழ்ந்த சுந்தரி
பார்த்திப வருடம் பகர்ரே வதியில்
நேர்ஏ காதசி யபர பக்க
நாளது ஆன்மா நமக்கது பேரமென
வேளை வந்து விரும்புதல் மன்னோ
சொற்றுப் பருக்கைத் துருத்திமட் பாண்ட
நாற்ற மெடுக்கு நாறுமிவ் வுடலை
ஆற்றுப் படுத்துத லம்பல மடியென
வேற்றுச் சட்டை விரும்புதல் மன்னோ
சிவய நமவினைச் சிற்றுடல் தெளிந்து
அவய மதுவே அவன்கழ லடியாய்
பாவினை களைந்து சாவினை யணைப்பமாய்
நாவினில் நமசி வாயவென் றரற்றிடப்
பிள்ளைகள் மருகர், மருகியர் பேரர்
அள்ளிடு பேத்தியர் அயலார் சுற்றம்
அனைவரும் அன்பினில் அழுதே புலம்பிட
குலமணி யம்மா குவலயம் நீங்கி
நலந்தரு நாதன் நற்கழ லடைதல்
மானிடர் யாவும் மண்ணதில் நீங்கி
வானிடம் நண்ணும் வகையது விளம்பும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் பிரலாபம்

எச்சத்தாற் கானுநின் னேற்றமது எமக்களித்த
பிச்சிப்பூ வாடியதோ பாரினிலே – இச்சகத்தில்
குலமணி யம்மாவெம் கோவரசி இல்லமதில்
இலமென்னும் நிலையிதோ ஈங்கு.

# பேரப்பிள்ளைகள் பிரலாபம்

ஊன்உருக்கி உயிர்கலந்து உள்ளத்தா லுயர்வுடனே
பான்மையுறு பேத்தியாய்ப் பாலடிசில் பிசைந்தூட்டி
தேன்கலந்த மொழிபேசித் தித்திக்க மேன்வருடி
வான்கலந்த ஞாயமென்ன வாழ்வே கசந்ததுவே.

# மருமக்கள் பிரலாபம்

புக்ககத்தின் தாயென்னப் பெருங்கால மெம்முடனே
எக்கணமும் அருகிருந்து இன்னடிசில் இனிதுண்டு
பக்குவமாய் வாழ்ந்தவெம் பொக்கிசமே மறைந்தனையே
சக்கரமே இழந்தவண்டிச் சேர்க்கதிக்கு இலக்கானோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரி பிரலாபம்

முத்திரையின் முழுநிலவே மாணரிய வுடன்பிறப்பே
சித்திரையின் நிலவே சிரிக்காயோ – இத்தரையில்
வாரான்மா வுடன்பிறப்பை வையமதிற் பெறுதலினிச்
சேர வருமோ சொல்லு.

# தேற்றம்

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டு
சூரையங் காட்டிடை கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

ஆக்கம்: கலைமணி
கதிரமலைநாதன் சரவணபவான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

வாவிஎல்லாம் தீர்த்தம் மணல்எல்லாம் வெண்ணீறு
காவனங்கள் எல்லாம் கணநாதர் - பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்தவத்தோர்
ஓதும் திருவொற்றியூர்.

ஆரூர் இங்கிருக்க அவ்வூர்த் திருநாளென்று
ஊரூர்கள் தோறும் உழலுவீர்! – நேரே
உளக்குறிப்பை நாடாத ஊமக்காள் நீவீர்
விளக்கிருக்கத் தீத்தேடு வீர்.

அத்திமுதல் எறும்பீ றாவுயிர் அத்தனைக்கும்
சித்தி மகிழ்ந்தளிக்கும் தேசிகா – மெத்தப்
பசிக்குதையா! பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
இசிக்குதய்யா காரோண ரே.

காலன் வருமுன்னே கண்பஞ் சடையுமுன்னே
பாலுண் கடைவாய்ப் படுமுன்னே – மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு!

விட்டுவிடப் போகுதுயிர்! விட்டஉடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் - அட்டியின்றி
எந்நேர மும்சிவனை ஏற்றுங்கள் போற்றுங்கள்
சொன்ன அதுவே சுகம்.

எத்தனை நாள்கூடி எடுத்த சரீரம் இவை?
அத்தனையும மண்தின்ப தல்லவோ? வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பகல் அற்றிடத்தே
மேலைக் குடியிருப் போமே!

இருப்பதுபொய் போவதுமெய் என்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை எண்ணாதே! – பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரி பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்கும் தான்!


எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர்மணம் இருக்கும் மோனத்தே – வித்தகமாய்க்
காதிவளை யாடிஇரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்!

மாலைப் பொழுதில் மஞ்சள் அரைத் தேகுளித்து
வேலை மெனகிட்டு விழித்திருந்து - சூலாகிப்
பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானால் என்செய்வாள் பின்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



எமது குடும்ப ஒளிவிக்காய்த் திகழ்ந்து
சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம்

## குணமணியம்மா அவர்கள்

கொழும்பு மருத்துமனையிற் சுகவீனமுற்றிருந்தபோது நலம்பெற வேண்டி உதவிய வைத்தியர்களிற்கும் மற்றும் கொழும்பில் உதவிய அன்பு உள்ளங்களுக்கும், மறைவு கேட்டு உடன் வந்து துன்பத்திற் பங்குகொண்டு பல்வகையில் உதவிய உற்றார், உறவினர், ஊரார், நண்பர்கள் மற்றும் வெளிநாடான ஜேர்மன், பிரான்ஸ், நோர்வே, லண்டன், சுவிஸ், கனடா ஆகிய இடங்களில் இருந்து எம்முடன் துக்கத்திற் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் இதயங்கலந்த நன்றியைத் தெரிவிக்கும் அதேவேளையில், தலைவியின் இறுதி யாத்திரையிற் கலந்துகொண்டு அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் ஆகியவற்றிற் பங்குபற்றி, ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்தித்தும் பல்வகையிலும் உதவிய பெருமக்கள் அனைவர்க்கும் பணிவுடன் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி.

இங்ஙனம்,

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச

இலட்சுமணர் + வள்ளியம்மை

- வேலுப்பிள்ளை + பொன்னம்மா
- அப்புத்துரை

- சாந்தகுலசிங்கம் + புஸ்பலதா
  - யசிந்தலா
  - கவிதா
  - பிரவீனா
  - நாகதீபன்
  - மயூரன்
  - கிருசாந்தன்
- கேதலோகேஸ்வரி
- தவராணி + தவராசா
  - முத்தமிழ்ச்செல்வன்
  - துஷ்யந்தினி
  - மாலினி
  - கோமதி
  - மாலதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

வல்லிபுரம் + அன்னம்மா

**குலமணியம்மா**

இராசாத்தியம்மா
+
செல்வவிநாயகம்

தர்மகுலசிங்கம்
+
புனிதராணி
↓
தினோஜன்
டினேசன்
கோபிசன்

சந்திராணி

இந்திராணி
+
குகதாசன்
↓
சுஜிதா

ன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

SIVARANJANAM

சரவணா அச்சகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org